முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 619**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.06.2021**, புதன்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானிகள் துணைகொண்ட தேசிகாபோற்றி
ஞானபண்டிதன் என் சக்தியாகவே
ஞாலமதில்வந்து அற்புதம்புரிகின்ற குருராஜனேபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும்இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரைஆசி
மாற்றம் செய்யவேண்டி உன்னுள்
மகான் சுப்ரமணியர்யானும் அற்புதம்நிகழ்த்த
3. ஆற்றல்பட அரங்கன் தொண்டர்படைகளாக
அகிலமதில் அடையாளங்கொண்ட மக்களெல்லாம் ஞானிகளாகி சடுதி
மரணம்வெல்லும் மகாசக்தி உள்ளவர்களாகி
தேக்கமின்றி உலகமாற்றம்செய்து தேசிகன் விரும்புகின்றவண்ணம் ஞானயுகம்படைத்து மகிழ்வர்
4. மகிழ்வுதரவே மக்களை மீட்கவே
மாதவபலமாக அறம் செய்கின்ற
அகிலத்தின் எந்தன் அவதாரயோகி
ஆறுமுகஅரங்கனை அடையாளங்கொண்ட தேசமே
5. தேசமே இந்தபேரிடர் காலத்தில்
தெரிவிப்பேன் உயிர்பலிமிகாது பாதுகாப்புப்பெற்று
ஆசிபட எந்தன்அருளோடு இனிதே
அழியாமை எனும்சக்திபட பாதுகாப்புகாணக்கூடும்
6. கூடவே அரங்கனை தொடர்ந்து
குவலயத்தில் தர்மபலம் பெருக்குகின்ற
நாடெங்கிலும் நல்ல பாதுகாப்பும்
ஞானிகள் வெளிப்பட்டு ஞான ஆட்சிக்காலமும்
7. காலமதும் அரங்கன் தயவாலே சடுதி
கலியுகம் கண்டு ஞானயுகமாகும்
கோலமதாய் காலம்தாழ்த்தா உலகோர்
குருராஜன்வாழ் ஓங்காரக்குடில் நோக்கிவர

8. வருகவே வையகம் மாறும்
வருகவே வையகத்தில் பாதுகாப்புக்கூடும்
தர்மபலத்தால் உலகம் நல்லுலகமாகி
தவசிமூலமாக உலகபெருமாற்றங்கண்டு அமைதிகூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.